1989 ஏப்ரல் 20]

(ஆ) மின் ஒப்பந்தக்காரர்களிடம் ஓய்ர் மேன் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான தேர்வு நடைபெறாதது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் மின் ஒப்பந்தக்காரர்களிடம் ஒயர் மேன் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்கு வதற்கான தேர்வு நடத்தாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர வர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்

அறிக்கை.

1975-க்கு முன்பு, தொழிற்கூடங்களில் பயிலாத கம்பியாளர் களுக்கான தேர்வு (Examination for private candidates) நடத்தப் பட்டது. இது கல்வித்தகுதியின்றி அனுபவத்தை மட்டுமே அடிப் படையாகக் கொண்டுள்ள மின்பணியாளர்களுக்காக நடத்தப் பட்ட தேர்வாகும்.

1975 ஆம் ஆண்டு வரை சுமார் 29,300 நபர்களுக்கு மின் கம்பியாள் உரிமம் வழங்கப்பட்டிருந்தது. இதுவன்றி ஆண்டொன்றிற்கு சுமார் 1500 பேர் வீதம் மாநிலத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி கூடங்கள் (சுமார் 80) மூலம் பயிற்சி பெற்று உரிமம் பெற்று வருகிறார்கள். இவர்கள் அனைவரும் அனுபவத்துடன், உரிய கல்வித்தகுதியையும் பெற்று பயிற்சி பெற்றவர்கள். மேலும் நமது மாநில தொழிற் பயிற்சி கூடங்களில் இடம் கிடைக்காது பிற மாநிலங்களில் பயிற்சி பெற்று வருகிறவர்களும் உள்ளனர். இவர்கள் அனைவரும் பூரண கல்வித்தகுதியும் முறையான பயிற்சியும் அனுபவமும் உள்ளவர்கள் இவர்களின் வேலை வாய்ப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டு மேற்கூறிய அனுபவத்தின் அடிப்படையிலான தேர்வுமுறை (Examination for private candidates) கைவிடப்பட்டது. தற்பொழுது மாநிலம் முழுவதற்கும் உரிமம் பெற்ற மின் ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். இவர்களிடம் வேலை பார்க்கும் உரிமம் பெற்ற மின் தொழிலாளர்கள் சுமார் 15,000 பேர். இவர்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய உரிமம் பெறாத தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 20,000 இருக்கக்கூடும்.

மின் ஒப்பந்தக்காரரிடம் வேலை பார்ப்பவர்கள் அல்லாமல் சுமார் 32,000 பேர் உரிமம் பெற்று மாநிலத்திலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் வேலை செய்து வருகின்றனர்.

இருப்பினும் மேற்கண்ட தேர்வை மீண்டும் நடத்தக்கோரி அரசுக்கும், மின்உரிமம் வழங்கும் வாரியத்திற்கும் விண்ணப்பங்கள் பெருமளவில் வந்து கொண்டிருப்பதால் அவை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க கருதி, தொழிற்பயிற்சி கூடங்களில் மின் கம்பியாளராக தேறிவரும் கம்பியாட்களுக்கு வழங்கப்படும் உரிமத்திற்கு சற்று குறைந்த தகுதியுடன் கூடிய உதவியாளர் (Helper) தகுதியில் உரிமம் வழங்க அனுபவத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவர்களுக்கு தேர்வு நடத்த அரசுக்கு அரசு தலைமை மின் ஆய்வாளர் பரிந்துரை செய்துள்ளார். இச்செயற்குறிப்பிற்கு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனரும் இணக்கம் தெரிவித்துள்ளார். இந்தத் தேர்வை நடத்துவதற்கான செலவினம், வழிமுறை பற்றிய விவரங்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டவுடன் இது தொடர்பான அரசு ஆணை விரைவில் வெளியிடப்படும்.

இப்பிரச்சினை அரசின் தீவிர கவனத்தில் இருக்கிறது.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு தலைவரவர்களே, விவர அறிக்கையின்படி 1975ம் ஆண்டுக்கு முன்னதாக மின் ஒப்பந்தக்காரர்களிடம் பணியாற்றுகின்ற மின் உரிமம் பெறாதவர்களுக்கு அனுபவத்தின் அடிப்படையில் அவர்களுக்கு தேர்வு நடத்தப்பட்டது. அதற்குபின் இதுவரையில் எந்தவித தேர்வும் நடத்தப்படவில்லை. விவர அறிக்கையில் 20 ஆயிரம் பேர்கள் மின் ஒப்பந்தக்காரர்களிடம் மின் உரிமம் பெறாமல் வேலை பார்ப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் என்னிடத்தில் கிடைத்திருக்கிற தகவல்களின் அடிப்படையில் கிட்டத்தட்ட 1 லட்சத்து 75 ஆயிரம் பேர் மின் ஒப்பந்தக்காரர்களிடம் மின் உரிமம் பெறாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் நீண்டகாலமாக இந்த கோரிக்கையை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள் ஏனென்றால், மின் ஒப்பந்தக்காரர்களிடம் பணி ஆற்றுகின்ற மின் உரிமம் பெறாதவர்களிடத்திலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி. நான் சுருக்கிச் சொல்லட்டுமா உங்களுக்கு? எப்படிச் சொல்வது என்று சொல்ல வேண்டுமா?

திரு. எஸ். டேனியல்ராஜ்: உரிமம் பெறாத அவர்களை மின் வாரியத்தினுடைய அதிகாரிகள் உரிமம் பெற்றுத்தான் வேலை செய்ய வேண்டுமென்று சொல்வதன் காரணமாக அந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அரசு கூட இதைக் கனிவோடு ஏற்று, இப்பொழுது உரிமம் வழங்குவதற்கு நடத்துவதற்குரிய தேர்வை நடத்துவதற்காக ஆணை பிறப்பிப்பது பற்றி அறிவித்திருக்கிறீர்கள். இருந்தாலும்கூட ஒருசில விதிகளைத் தளர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கல்வி, வயது வரம்பு இல்லாமல் அனுபவத்தின் அடிப்படையிலே தேர்வு நடத்தப்பட வேண்டும்.

1989 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி. என்ன கேள்வி கேட்க விரும்புகிறீர்கள் ?

திரு. எஸ். டேனியல்ராஜ்: கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்றால், கேள்வியைக் கேளுங்கள். கவனத்திற்கெல்லாம் கொண்டு வந்து, உங்களுக்கு அறிக்கையெல்லாம் கொடுத்தாகிவிட்டது, இதிலேயிருந்து இன்னும் உங்களுக்கு எழுகிற ஐயம் என்ன ?

திரு. எஸ். டேனியல்ராஜ் : கல்வி, வயது வரம்பு இவைகளைத் தளர்த்த வேண்டும். அதுபோன்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''தளர்த்துவீர்களா ?'' அதோடு இப்பொழுது நீங்கள் உட்காருங்கள். அவர் பதில் சொல்வார்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதில் குறிப்பிட்டுக் கேட்கும்பொழுது 2 லட்சம் பேர் மின் உரிமம் பெறாமல் இருக்கிறார்கள் என்றும், ஆனால் இங்கு அவையில் பேசும்பொழுது 1,75,000 பேர் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவர்களுக்குத் தெரிந்த வரையில் 1,75,000 பேர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்களுக்குத் தெரிந்த கணக்குவரை 20,000 பேர் தான் மின் உரிமம் பெறாமல் இருக்கின்றார்கள் என்ற ஒரு கணக்கு இருக்கிறது. இருப்பினும் உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மேற்கொண்டு ஆய்வு செய்ததில், 1975 ஆம் ஆண்டுக்கு முன்பு எட்டாவது வரை படித்தவர்களுக்கோ அல்லது படிக்காதவர்களுக்கோ அனுபவத்தின் முறைப்படி அவர்களுக்கு மின் உரிமம் வழங்கப்பட்டு வந்தது. அதன் பிறகு ஐ. டி. ஐ. படித்தவர்கள் வருடத்திற்கு 1,500 பேர் வரை படித்துத் தேர்வு பெறுவதால் அவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரும் பொருட்டு, அவர்கள்தான் அதற்கு உடையவர்கள் என்று அறிவித்தார்கள். அதன்பிறகு அவர்களுக்குத்தான் அந்த உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் அவர்களுக்குக் கீழ் ஹெல்ப்பர்களாக தகுதியுடையவர்களாக ஆக்கி, அதேபோல, 1975 ஆம் ஆண்டுக்கு முன்பு வழங்கப்பட்டது போல, படிப்பை தளர்த்தி அனுபவத்தின் முறைப்படி அவர்களுக்கு மின் உரிமம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. விவர அறிக்கையிலே ஐ. டி. ஐ. படித்தவர்களுக்கு இணையாக உரிமம் இல்லாமல் அதற்குத் தகுதி குறைந்த உரிமம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, 1972 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட, 29,000 பேர்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்திற்குச் சமமான தகுதியின் அடிப்படையிலே உரிமம் வழங்குவதற்கு இந்தத் தேர்வு நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்களுக்கு உதவியாளர்களாக இருப்பதற்குத்தான் தேர்வு நடத்தப்படும்.

6. ஒழுங்குப் பிரச்சினை.

மானியக் கோரிக்கைகள் தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்புகள் முன்கூட்டியே உறுப்பினர்களுக்குக் கிடைக்காதது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : பாய்ன்ட் ஆப் ஆர்டர். அலுவல் சம்பந்தப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இதே மன்றத்திலே நான் எழுப்பி, மானியக் கோரிக்கைகள் மீதான விளக்கக் குறிப்புகள் எங்களுக்கு இரண்டு தினங்களுக்கு முன்பாக தர வேண்டுமென்று சொன்னேன். நீங்களும் அப்படி சேர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்தீர்கள். நேற்றைய தினம்கூட மதிப்பிற்குரிய உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். ஆனாலும், இன்றைக்கு விவாதத்திற்கான கோரிக்கைகள் சட்ட மன்ற அலுவலகத்திலே இருக்கின்ற எம். எல். ஏ.க்களுக்கு இரவு ஒன்பது மணிக்குத்தான் வந்திருக்கின்றன. காலையும், மாலையும் தொடர்ச்சியாக அவையினுடைய அலுவல் நடைபெறுகின்ற காரணத்தினாலே இவற்றைப் படிப்பதற்கு ஏதுவாகக் கட்டாயமாக இரண்டு நாட்களுக்கு முன்பாகக் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று மீண்டும் உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்டிப்பாக ஏற்பாடு செய்யப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

7, மானியக் கோரிக்கைகள்—1989–90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு திரு. பெரன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,03,84,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''